MAY 2024 **U/ID 33213/UCT3C**

Time : Three hours Maximum : 75 marks

பகுதி அ — ($10 \times 2 = 20$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் பத்திற்கு மட்டும்
30 சொற்களில் விடை தருக.

1. முத்தமிழ்க் காப்பியம் எது? ஏன்?

2. மாதவியின் தேசிக்கூத்துப் பற்றி எழுதுக.

3. துர்க்கை ஆடும் கூத்தின் பெயர் என்ன?

4. மாதவியிடம் ஓலை பெற்று வந்தது யார்?

5. பாணரோடு ஆடிய கோவலனின் நிலையை எழுதுக.

6. 'என்தீது என்றே எய்தியது' – யார் கூற்று.

7. காவற்பெண்டு புலம்பியதன் காரணம் யாது?

8. வேட்டுவ வரியில் அவிப்பலி குறித்து எழுதுக.

9. இந்திர விழாவில் பட்டிமண்டபம் பற்றி எழுதுக.

10. ஆதிரையின் கணவன் யார்?

11. காவலரின் வியப்புக்கான காரணத்தை எழுதுக.

12. தீவினையினால் வரும் கேடுகளை எழுதுக.

பகுதி ஆ — ($5 \times 5 = 25$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் ஐந்திற்கு மட்டும் 200 சொற்களில் விடை தருக.

13. கோவலன் கண்ணகியின் திருமண நிகழ்வினை எழுதுக.

14. தண்ணுமை முதல்வன் என்பவன் யார்? விளக்குக.

15. கவுந்தியடிகளின் உறுதிப்பாட்டை விளக்குக.

16. வைகையின் வனப்பினை எழுதுக.

17. கண்ணகியின் நாணத்திற்கான காரணத்தை விளக்குக.

18. இந்திரவிழா வரலாற்றை எடுத்துரைக்க.

19. வீடுபேற்றிற்குரிய நெறியாக மணிமேகலை உரைப்பனவற்றை எழுதுக.

பகுதி இ — ($3 \times 10 = 30$ மதிப்பெண்கள்)

கீழ்வரும் வினாக்களுள் எவையேனும் மூன்றிற்கு மட்டும் 500 சொற்களில் விடை தருக.

20. மாதவி தலைக்கோல் பட்டம் பெற்ற நிகழ்வை கட்டுரைக்க.

21. கோவலனும் கண்ணகியும் கவுந்தியடிகளுடன் பயணித்த நிகழ்வை கட்டுரைக்க.

22. வாழ்த்துக் காதையின் வாழ்த்துச் செய்திகளைத் தொகுத்துரைக்க.

23. ஆதிரையின் வரலாற்றைக் கட்டுரைக்க.

24. சிறைக்கோட்டம் அறக்கோட்டமாகிய நிகழ்வைப் புலப்படுத்துக.